

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தெற்கு ஒன்றியம் மணியம் பட்டு ஊராட்சி அ.தி.மு.க.வைச் சார்ந்த அசோக்குமார் தலைமையில் பெல் நரசிங்கபுரம் ஒப்பந்த தொழிலாளர் சங்கம் பாரதிராஜா குமார் தலைமையில் 125 பேர் அக்கட்சியில் இருந்து விலகி கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி முன்னிலையில் தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட இளைஞரணி செயலாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மு.சிவானந்தம், துரை, மஸ்தான், குமுதா குமார், ஒன்றியச் செயலாளர் பத்மநாபன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.சிவஞானம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், பேரூர் செயலாளர் சி.பெரியசாமி, அவைத்தலைவர் சி.சுப்பிரமணி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் விஜியகுமார், மணியம் பட்டு மாவட்டப் பிரதிநிதி மோகன், லிங்கேஷ், பெல் பாண்டியன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சிவா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டான் போஸ்கோ மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



கடலூர் மாவட்டம், நெய்வேலி என்.எல்.சி., தொ.மு.ச., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., வி.சி.க, உள்ளிட்ட மத்திய, மாநில அரசு ஊழியர் சங்கத்தினர் மற்றும் தொழிற்சங்கத்தினர். அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மேலும் மறியல் போராட்டம் நடத்திய தொழிலாளர்களை, காவல்துறையினர் கைது செய்து திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். தொழிற்சங்க நிர்வாகிகளை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் சந்தித்து பிஸ்கட்,தண்ணீர் வழங்கி, வாழ்த்துத் தெரிவித்தார். இதில் என்.எல்.சி., தொ.மு.ச. பொதுச் செயலாளர் வீ.குருநாதன், தலைவர் ஞா.ஞானஒளி, பொருளாளர் ஏ.அப்துல் மஜீத், அலுவலக செயலாளர் ஆர். சீனிவாசன் உள்ளிட்ட கூட்டணி தொழிற்சங்க நிர்வாகிகள், தொ.மு.ச. துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், காண்ட்ராக்ட் தொ.மு.ச. நிர்வாகிகள், மகளிர் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை - அரியலூர் - மதுரை மாவட்டங்களில்

# ரூ.64.43 கோடி மதிப்பில் - 7 விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜூலை 12

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை, அரியலூர், மதுரை மாவட்டங்களில் செயற்கை வளைகோல் பந்து மைதானம் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி, கரூர், மதுரை மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்கும் பணி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி அமைக்கும் பணி என மொத்தம் 64.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், நவீன உடற்பயிற்சி கூடங்கள், சட்டமன்ற தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டு விடுதி கட்டடங்கள் என பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், மதுரை மாவட்டத்தில் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை வளைகோல் பந்து மைதானம் புதுப்பிக்கும் பணிக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 10.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டத்தில் 10.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய செயற்கை வளைகோல் பந்து மைதானம் அமைக்கும் பணிகளுக்கும் காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, இந்நிகழ்வில் மதுரை மாவட்டத்தில் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைவிங் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் அமைக்கும் பணி, கரூர் மாவட்டத்தில் 6.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நீச்சல் குளம் அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 7.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு விடுதி, சேலம் மாவட்டத்தில் 7.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு விடுதி அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல்தியாகராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உலக மக்கள் தொகை தினம் - 2025

# விழிப்புணர்வு உறுதிமொழி - பேரணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொங்கி வைத்தார்!

சென்னை,ஜூலை.12-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (11.07.2025) சென்னை செம்மொழி பூங்காவில் "உலக மக்கள் தொகை தினம் 2025" விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்று, பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, பிறகு டிஎம்எஸ் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளம் பருவத்தினருக்கான விழிப்புணர்வு நல கையேடு மற்றும் குடும்ப நல விளக்க கையேடு வெளியிட்டு, விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்ற செவிலிய மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி விழா பேருரையாற்றினார்கள். இந்த நிகழ்விற்கு பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**உலக மக்கள் தொகை தினம் - 2025**

39வது உலக மக்கள் தொகை தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. உலக மக்கள் தொகை தினம் எதனடிப்படையில் வந்தது என்றால் 1987 ஜீலை 11 ஆம் தேதி உலகின் மக்கள் தொகை 500 கோடியை எட்டிய தினமான அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜீலை 11 ஆம் தேதி உலக மக்கள் தொகை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் உலக மக்கள் தொகை தினம் உறுதிமொழி ஏற்று, தொடர்ந்து பேரணி, அதனைத் தொடர்ந்து கருத்தரங்கம் என்கின்ற வகையில் இந்நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தாண்டுக்கான உலக மக்கள் தொகை தினம் கருப்பொருள் என்பது ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப் பேறு, திட்டமிட்ட பெற்றோருக்கான அடையாளம் எனும் தலைப்பில் இது நடைபெற்றுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பேறு காலத்தில் தாய்மார்களின் மரண விகிதம் என்பது 39.4% அளவிற்கு குறைந்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன்னாள் 70, 90 என்றிருந்த இறப்பு சதவிகிதம் தற்போது 39.4 என்கின்ற அளவிற்கு குறைந்துள்ளது. அதே போல் சிசு மரண விகிதம் 1000த்திற்கு 7.7 என்கின்ற அளவில் குறைந்துள்ளது. இதே 5 ஆண்டுகளுக்கு முன்னாள் 14 என்கின்ற அளவில் இருந்தது. இப்படி பல்வேறு வகைகளில் மரண விகிதங்களை குறைத்திருக்கும் இந்த அரசு, குறைந்த வயதில் திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கையை குறைத்திடும் வகையில் பல்வேறு வகைகளிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அந்தவகையில் கிருஷ்ணகிரி, தர்மபுரி போன்ற பல்வேறு மாவட்டங்களில் குறைந்த வயதில் திருமணம் செய்துக் கொள்வது என்பது மிகப் பெரிய அளவில் குறைந்திருக்கிறது. அந்த வகையில் குடும்ப நலத் துறை சார்பில் அதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதன் காரணமாக, இன்று பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இளம் பருவத்தினருக்கான விழிப்புணர்வு கையேடு ஒன்றும், குடும்ப நலத்திட்ட கையேடு ஒன்றும் இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

ரேபிஸ் வைரஸ் பாதிப்பு தொடர்பான கேள்விக்கு

ரேபிஸ் பாதிப்பு என்பது தமிழ்நாட்டில் பெரிய அளவில் பாதிப்பு என்பது இல்லை. உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் தெரு நாய்களை கட்டுப்படுத்தும் பணிகள் என்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டு மக்கள் நல்வாழ்வுத் துறை, உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைள் ஒருங்கிணைத்து ஒரு கூட்டம் நடைபெற்றது. இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் இப்பிரச்சினைகளுக்கு முதல்வர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது கிடையாது. ஆனால் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த பாதிப்பு பெரிய அளவில் கட்டுக்குள் இருக்கிறது. கடந்த காலங்களில் நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்து என்பது தாலுக்கா அளவில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளிலும், தலைமை மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே இருந்துள்ளது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்புக்கடிக்கான ASV மருந்தும், நாய்க்கடிக்கான ARV மருந்தும் அனைத்து அரசு மருத்துவனைகளிலும் இருப்பு என்கின்ற வகையில் இருப்புகள் வைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் பாதுகாப்பான மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

நிபா வைரஸ் தொடர்பான கேள்விக்கு

நிபா வைரஸ் பாதிப்பு என்பது கேரளாவில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பொதுவாகவே தமிழ்நாட்டில் கேரளாவில் இருந்து வருபவர்களை விதிமுறைகளின்படி, கண்காணிப்பது என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோவை வட்டாரத்தைப் பொறுத்தவரை, பொது சுகாதாரத்துறையின் சார்பில் 10 சாலை வழிகளிலும், திருப்பூர் மாவட்டத்தில் ஒரு சாலை வழிகளிலும், உதகை மாவட்டத்தில் 9 சாலை வழிகள் என மொத்தம் 20 சாலை வழிகளில் வரலாம். ஆக மொத்தம் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு மொத்தமாக 20 சாலை வழிகளில் வரலாம். அங்கு உள்ள அனைத்து வழிகளிலும் பொது சுகாதாரத்துறை சார்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், இ.ஆ.ப. குடும்ப நல இயக்குநர் மரு.சித்ரா, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு. தேரணி ராஜன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், துணை இயக்குநர் சங்கரேஸ்வரன் மற்றும் உயரலுவலர்கள், செவிலிய மாணவிகள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் "புதுமைப் பெண்" திட்டத்தால்

# உயர்கல்வி சேர்க்கையில் - மாணவிகள் எண்ணிக்கை 31 சதவீதமாக உயர்வு!

## அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 12**

**முதலமைச்சரின் 'புதுமைப் பெண்' திட்டத்தால் உயர்கல்வி சேர்க்கையில் மாணவிகளின் எண்ணிக்கை 31 சதவீதமாக உயர்ந்துள்ளது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

நேற்று (11.07.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் சென்னை, குருஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரி கல்லூரியில் நடைபெற்ற 30வது பட்டமளிப்பு விழாவில் மாணாக்கர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது:-

பெண்கள் தரமான உயர் கல்வி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ஸ்ரீமகாவீர் ஜெயின் கல்யாண் சங்கத்தினரால் 1991-ஆம் ஆண்டு இக்கல்லூரி தொடங்கப்பட்டு, 35 ஆண்டுகளாக சிறப்பான உயர்கல்வியினை வழங்கி வருகிறது. தற்போது, இக்கல்லூரியில் 8 இளநிலை மற்றும் 2 முதுநிலை பாடப்பிரிவுகளில் மொத்தம் 2,473 மாணவிகள் பயின்று வருகின்றனர்.

மாணவிகள் தங்களின் எதிர்காலத்தை வடிவமைத்து உயர்வு பெற அனைத்து செயல்திறன்களையும் கற்றுக் கொடுக்கும் சிறந்த கல்லூரியாக குரு ஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரி செயல்படுகின்றது. மாணவிகளின் சேவை மனப்பான்மையை ஊக்குவிக்கும் விதமாக நாட்டு நலப்பணித் திட்டம், ரோட்டரி குழு. சமூக சேவை குழுமம். இளைஞர் செஞ்சிலுவை சங்கம் என 18 குழுக்கள் இக்கல்லூரியில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மாநில அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கைப்பந்து விளையாட்டில் வெண்கலப்பதக்கமும் மாவட்ட அளவிலான போட்டிகளில் இரண்டாமிடமும் பெற்று விளையாட்டுத் துறையிலும் இக்கல்லூரியில் மாணவிகள் சிறந்து விளங்குகிறார்கள்.

தேசிய மாநில அளவிலான துப்பாக்கி சுடும் போட்டிகளில் வி. பிரகதி நேகர் என்ற மாணவி தேசிய அளவில் தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். குதிரையேற்ற போட்டிகளில் ஷகீரா என்ற மாணவி வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார். ஆண்டு தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று பட்டம் பெற்று வருகின்றனர். தற்போது பட்டம் பெறும் மாணவிகளில் பல்கலைக்கழக அளவில் 21 மாணவிகள் முதல் பத்து இடங்களைப் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர். இன்று நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் 651 இளங்கலை மாணவிகளும், 13 முதுகலை மாணவிகளும் பட்டம் பெறுகின்றனர்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 41 இலட்சம் மாணாக்கர்கள் பயன் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் 1049 மாணவிகள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர், 57 மாணவிகள் முதல் தலைமுறை பட்டதாரிகள், 105 மாணவிகள் பிற்ப்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்ப்படுத்தப்பட்டோர் கல்வி உதவித்தொகை பெறுகின்றனர், 554 மாணவிகள் ஆதிதிராவிடர் கல்வி உதவித் தொகை பெறுகின்றனர். தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புதுமைப் பெண் திட்டத்தால் மாணவிகள் உயர்கல்வி பயிலும் எண்ணிக்கை 31 சதவீதம் உயர்ந்துள்ளது. தனியார் கல்லூரியாக இக்கல்லூரி அமைந்திருந்தாலும், இக்கல்லூரியில் பயிலும் 1,765 மாணவிகள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வருவது பெருமைக்குரியதாகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர் எப்போதும் சிறுபான்மையின மக்களுக்கு ஆதரவாகப் பேசியும், எழுதியும் வந்தார்கள். சிறுபான்மை மக்களின் பாதுகாவலராகக் கலைஞர் எப்போதும் திகழ்ந்தார். டாக்டர் கலைஞர் அவர்களின் வழித்தடத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நல்லதோர் ஆட்சி நடத்தும் நமது முதலமைச்சர் அவர்கள் மதச் சிறுபான்மையினரையும் மொழிச் சிறுபான்மையினரையும் தம்மிரு கண்கள்போல் பாவித்து மிகச்சிறந்ததோர் ஆட்சியை நடத்தி வருகிறார்.



நமது முதலமைச்சரின் ஆட்சிக்காலம் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியாக இருந்து வருகிறது. ஒரு சாரரார்களுக்கு மட்டுமே உடைமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த 'இட ஒதுக்கீடு' கோட்பாட்டின் வெற்றிதான் இது. இன்றைய தலைமுறையினர் இவற்றை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இதுபற்றிய விழிப்புணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் பெறவில்லை என்றால், பல்லாண்டுகள் நாம் போராடிப் பெற்ற வெற்றியைத் தமிழினப் பகைவர்கள் இளங்கலை படிப்பிற்கே கியூட் என்ற நுழைவுத் தேர்வின் மூலம் பறித்துக் கொண்டு விடுவர்.

பொறியியல் கல்விக்கு நுழைவுத் தேர்வு இருந்த காலத்தில் கிராமப்புற மாணவர்கள் சேர்க்கை 25 ஆயிரம் ஆக இருந்தது. பின்னர், முன்னாள் முதலமைச்ர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்ட பின்னர் கிராமப்புற மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை77 ஆயிரம் ஆக உயர்ந்தது என்பதை கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறேன். 3,5,8 வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு என்பது இடை நிற்றலையே ஏற்படுத்தும். தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை மாணவர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும்.

இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர் கல்வியில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல், போராடி வருகிறார். இன்று பட்டம் பெறும் மாணவிகளாகிய நீங்கள் இதுவரை, ஒரு மாணவி என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் இருந்திருப்பீர்கள். ஆனால், இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி மனிதராக இந்தச் சமூகம் உற்றுநோக்கும். அதற்கான அடையாளம்தான் இன்று நீங்கள் பெறும் பட்டம். இன்று நீங்கள் பெறும் பட்டம் உங்கள் வாழ்வில் புதிய வெற்றிகளை குவிக்கட்டும். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு, உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர் பி.கவுதம் வைட், கல்லூரி தலைவர் எம்.ஹரீஷ்சந்த் பெட்டாலா, முதல்வர் டாக்டர் எம்.கே.மாலதி, பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் திரிசூலம் ஊராட்சியில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ அவர்கள் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறை கட்டிடத்தை பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது ஊராட்சி மன்ற உறுப்பினர் எம். மாரிமுத்து கிளைக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.